சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No:76/2022 Date: 01.04.2025

பிரதிவாதி தரப்பு சாட்சி–3(Dw3) ன் வாக்குமூலம் (1872 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திருமதி.K.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாடக்குமார் | சாதி | : | -- |
| த/பெ | : | காந்தி | சமயம் | : | -- |
| கிராமம் | : | விருதுநகர் | தொழில் | : | |
| தாலுகா | : | விருதுநகர் | வயது | : | 38 |

முதல் விசாரணை–

நான் தற்போது விருதுநகர், ஊரகம் வடக்கு பிரிவில் உதவி மின் பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். நடையநேரி கிராம கதவு எண். 2/93 ல் உள்ள கட்டிடத்தின் மின் இணைப்பு எண்.228014263 மகமாயி அம்மாள் பெயரில் உள்ளது. அதற்கான நுகர்வோர் பதிவேடு **சா.சா.ஆ.1.(அசலுடன் ஒப்பிடப்பட்டது)** நடையநேரி கிராம கதவு எண். 2/78 ல் உள்ள கட்டிடத்தின் மின் இணைப்பு எண்.228014391 ஆனது மகமாயி அம்மாள் பெயரில் உள்ளது. அதற்கான நுகர்வோர் பதிவேடு **சா.சா.ஆ.2.(அசலுடன் ஒப்பிடப்பட்டது).** மேற்படி இரண்டு மின் இணைப்புகளும் 12.06.1986 ல் பெறப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்கு எந்த சொத்து சம்மந்தமானது என்ற விபரம் எனக்கு

தெரியாது. மேற்படி இரண்டு மின் இணைப்பு எண்களும் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கு உரிமை இருந்தால் ஒரே நபர் பெயருக்கு வருவாய் ஆவணங்கள் வாரிசு சான்றிதழ் மற்ற நபர்களிடம் தடையில்லா சான்றிதழ் பெற்றிருந்தால் மாற்ற முடியும். மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய கால நிர்ணயம் இல்லை. மின் இணைப்பு பெற்றுள்ள மகமாயி அம்மாள் உயிருடன் இருக்கிறாரா என்ற விபரம் தெரியாது. வழக்கு விபரம் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், பிரதிவாதி கேட்டுக்கொண்டதின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.